2008 ஏப்ரல் 11] [பேரவைத் தலைவர்]

குறித்த தீர்மானம். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்க (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம், என்ன?

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது நேரம் கடந்துவிட்டது. எனவே, பதிலுரையை நீங்கள் ஒத்திவைப்பதிலே எனக்கு ஒன்றும் மாற்றுக் கருத்து இல்லை. குறைந்தபட்சமாக, முன்னணித் தலைவர்களுக்காவது தகவல் தெரிவிக்க வேண்டுமா, இல்லையா? அவர்களிடம் கலந்துபேசிவிட்டுச் சொல்லவேண்டுமா, இல்லையா? நீங்களே முடிவெடுத்து அறிவிப்பது என்பது, எந்தவகையிலே பொருத்தமாக இருக்கிறது? ஒரு சில கட்சித் தலைவர்களிடம் மட்டுமே கலந்துபேசிவிட்டு, அறிவித்துவிடுகிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் உங்களுக்குப் பதில் சொல்வார்கள், உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று எதிர்பாராதவிதமாக பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. கோ.க. மணி அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்ற ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். நீங்களெல்லாம் அதில் பேசிய காரணத்தினாலே, ஏறக்குறைய 40 நிமிட நேரம் அதற்காகச் செலவழிக்கப்பட்டுவிட்டது. அதனால்தான் இந்தச் சூழ்நிலை இன்று ஏற்பட்டிருக்கின்றது. எதிர்காலத்திலே இப்படி ஏற்படாமல் அரசு பார்த்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

8. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 15-4-2008 அன்று வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 15-4-2008, செவ்வாய்க்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

15-4-2008 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 15-4-2008 (செவ்வாய்க்கிழமை) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-47 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

40. (i) 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்கீழ் பதிவு பெற்ற யாதொரு வணிகர், ஓசூரில் உள்ள திருவாளர்கள் டி.வி.எஸ். மோட்டார் நிறுவனத்திற்கு அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்காக விற்பனை செய்யப்படும் பொருட்களின்மீது செலுத்தத்தக்க வரியினை அறிவிக்கையில் இணைக்கப்பட்ட படிவத்தில் உறுதிமொழி அளிக்கப்படுவதின் பேரில் விலக்களித்தது குறித்தும்; (ii) ஓசூரில் உள்ள திருவாளர்கள் டி.வி.எஸ். நிறுவனத்தால் தயாரிக்கப்படும் மூன்று சக்கர வண்டிகளின் விற்பனைமீது கூடுதல் வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்தது குறித்தும் மற்றும் (iii) ஓசூரில் உள்ள திருவாளர்கள் டி.வி.எஸ் நிறுவனத்தில் தயாரிக்கப்படும் இரண்டு மற்றும் மூன்று சக்கர வண்டிகளின் விற்பனைமீது அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரியினை ஒரு சதவிகிதமாகக் கணக்கிட வேண்டும் என்பது குறித்தும் வணிக வரிகள் மற்றும் பதிவுத் (பி2) துறையின் 6-11-2007 ஆம் நாளிட்ட 181 ஆம் எண் அரசாணையில்